39

# மொழியின் அதியற்புத இயல்பு

## மனிதனது அற்புதச் செயல்கள்

மனிதன் இதுவரை எத்தனையோ அரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றான். நீர்வளம், நிலவளம் மிகுந்து நாகரிகம் முதிர்ந்து மக்கள் இன்புற்று வாழ்ந்து வந்த அழகிய பெரிய நகரங்களையும் கண நேரத்தில் உயிரினமே வாழமுடியாத நாச பூமியாக அழிக்கக் கூடிய அணுக்குண்டை இயற்றியிருக்கின்றான். எண்ணிறந்த வகைகளில் இக்காலத்தில் பயனளித்து வரும் மின்சாரத்தையும் ரேடியோவையும் கண்டு பிடித்திருக்கின்றான். நாம் பிரயாணம் செய்வதற்குத் தக்க ரெயில், மோட்டார்கார் முதலிய தன்னியங்கி ஊர்திகளை அமைத்திருக்கின்றான். மணியொன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல் தூரம் வான வழியாக நம்மைக் கொண்டு செல்லவல்ல ஆகாயவிமானங்களை சிருஷ்டித்திருக்கிறான். எஞ்சினியரிங் துறையில் 'பெனாமா' கால்வாய் முதலிய பிரும்மாண்டமான வேலைகளை இயற்றி முற்று வித்திருக்கிறான். சில மணிக்கூறுகளில் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களை வெளியிட்டு அறிவை உலகெங்கும் பரப்பிவரும் அச்சியந்திரங்களை நிருமித்திருக்கிறான்.

இவையெல்லாம் அதியற்புதமான செயல்களேயாகும். ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலான ஒரு அற்புதத்தையும் அவன் இயற்றியிருக்கிறான். அது யாது என்றால், அவன் பேசக் கற்றுக்கொண்டதும் எழுதக் கற்றுக்கொண்டதும்தான். அவன் ஆதி மக்கள் நிலையில் இருந்து நாகரிக நிலையை அடைவதற்கு இவை இரண்டும் தான் அதி முக்கியமான காரணங்களாகும். இவ் இரண்டையும் அற்புதம் என்று நாம் இக்காலத்தில் எண்ணக்கூடமாட்டோம். அத்தனை சாதாரணக் காரியமாக இவை நமக்கு ஆகிவிட்டன. நமக்கு இவை இயற்கையாக அமைந்தவை என்று கூட நினைக்கின்றோம். நமது தினசரி வாழ்க்கையில் இவை அத்தனை எளிதான சாமானிய விஷயங்கள்.

கைக் குழந்தைப் பருவத்தில் பேச்சே இல்லாதபடி 'ம்மம்,' 'பப்பப்','கக்கக்' முதலிய ஒலிகளை உண்டாக்கி வந்ததையும், பின்பு மழலைப் பருவத்தில் உச்சரிப்புத் திருந்தாதபடி'பாச்சி' 'சோச்சி' முதலியவாகச் சொல்லிக் கொண்டிருந்ததையும் நாம் மறந்து விட்டோம். மேலும் இப்பொழுது எத்தனை எத்தனையோ விரைவாகப் புஸ்தகங்களை வாசித்து முடிக்கிறோம். குழந்தையாக இருக்கும் போது 'ப-ட-ம், .படம்' என்று கஷ்டப்பட்டுச் சொற்களைக் கற்று வந்தோம் என்பதும் நமக்கு நினைவில் இல்லை.

### பேச்சே இல்லாத காலம்

நமது ஆயுளிலேயே இப்படி இருக்கும் போது, மனித இனத்தின் வாழ்வில் இவ் இனம் ஒரு காலத்தே பேச்சே வழங்காதபடி இருந்தமை நம் நினைவில் இல்லை என்பது வியப்பாகுமா? மக்கள் இனத்தின் மிகப் பூர்வ சரித்திரத்தில் வெளிச்சமற்ற இருட்பகுதி ஒன்றுண்டு. அப்பகுதியை நமது மனக்கண்ணால் உற்று நோக்குவோமேயானால், அங்ஙனம் பேச்சே வழங்காத காலம் உண்டென்பது விளங்கும். அக்காலத்தே, மக்களுக்கு கருத்தை வெளியிட இன்றியமையாதது என்று இப்போது தோன்றும் பேச்சு முறை ஆரம்ப நிலையில் தான் இருந்தது.

### பேச்சின் சிறப்பு

ஏதோ ஒரு அரிய தெய்வ சக்தியால் இப்போதுள்ள ரேடியோ, தன்னியங்கி ஊர்திகள், ஆகாய விமானங்கள், தூர ஒலிக்கருவிகள், மின்சார விளக்குகள், புகைவண்டிகள், புகைக்கப்பல்கள் எல்லாம் திடீரென்று முற்றும் அழிவு பட்டுப் போயின என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது என்னவாகும்? மக்களது இன்றைய முன்னேற்ற நிலையில் இருந்து சில நூறு வருஷங்கள் நாம் பின் வீழ்த்தப் படுவோம். இதைத் தவிர வேறுவகையில் நாம் பாதிக்கப்படமாட்டோம். முற்குறித்தபடி இழந்து விட்ட எல்லாவற்றையும் பழையபடி மனித-அறிவு இயற்றிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், திடீரென்று பேச்சுவழக்கு என்பது மக்களிடமிருந்து முற்றும் நீங்கிவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது எந்த நிலையில் இருப்போம் என்பதை நாம் நினைக்கவும் கூடவில்லை. முற்குறித்த ரேடியோ முதலியவைகளுக்குப் பெயர்களே இருக்கமாட்டாது. நம்மிடமுள்ள புஸ்தகங்கள் அர்த்தமற்றவைகளாய்ப் போய்விடும். பணத்தை எண்ண முடியாது. ஒன்றையும் வாங்கவும் முடியாது; விற்கவும் முடியாது. நண்பர்கள் யாரேனும் வந்தால், 'வாருங்கள்' என்று உபசாரம் கூறமுடியுமா? ஒரு வயதுக் குழந்தை எந்த நிலையில் இருக்குமோ, அந்த நிலைக்கு மனித - இனம் முழுதும் வந்து விடும். நமது முன்னேற்றம் எல்லாம் தொலைந்து விடும். உயிரினங்களுள் தலை சிறந்தது மக்களினம் என்பதற்கு மாறாக, அவற்றுள் அறிவுள்ள காட்டு மிருகத்தின் நிலையை நாம் அடைந்து விடுவோம்.

மேற்கூறியவற்றால், பேச்சுத்தான் அவன் இயற்றியவற்றுளெல்லாம் அதியற்புதமானது என்பது எளிதில் விளங்கும். பேச்சு இல்லையானால் மனித இனத்திற்கு முன்னேற்றம் என்பதே இல்லாமற் போய்விடும். பேச்சுப் பிறந்த காலத்தோடு தான் நாகரிகமும் பிறந்தது.

### பேச்சின் இயல்பு

பேச்சுத் தெரியாத காலத்திலுங்கூட மனிதன் மனம் ஒருவாறு தொழிற்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அவன் கருத்துக் கோணல் மாணலாய் ஒருவாறு நிகழ்ந்தது. ஒழுங்குபட்டுச் செல்லாமல் தாறுமாறாகச் சென்றது. பொருள் நிச்சயமில்லாதபடி தடுமாறி நடந்தது. பொருள் தொடர்ச்சி அமைவதற்கும் சிறிதும் இடமில்லாமலிருந்தது. பேச்சிற் சொல்வழங்கத் தொடங்கிய காலத்திலிருந்து, இச் சீர்கேடான நிலை முற்றும் மாறிவிட்டது. மனிதன் மனம் ஒழுங்காகச் சிந்திக்கும் திறமைபெற்றது. அவனிடம் பொருள் நிச்சயத்தோடு ஆழ்ந்த கருத்துக்கள் நிகழலாயின. இதனால் ஏற்பட்ட நன்மை அளவிடற்கரியதல்லவா? கருத்தும் பகுத்துணர்வும் பேச்சுச் சொற்கள் ஆகமாட்டா, என்றாலும் பேச்சுச் சொற்களிலிருந்து அவற்றைப் பிரிக்க முடியாமற் போய்விட்டது. நம்மால் இப்பொழுது சொற்களின் உதவியில்லாமற் சிந்திக்கவே முடியவில்லை. முடியுமா என்று முயற்சி செய்தால் அது வீணான முயற்சியே, அப்படியானால் பேச்சின் இயல்பு யாது? மக்களின் கருத்து ஒழுங்குபெற நிகழ்வதற்கும், அதனை ஒருவர்க்கொருவர் உணர்த்திக் கொள்வதற்கும் உரிய கருவியே 'பேச்சு' ஆகும்.

கீழ்த்தரமான பிராணிகள் எவ்வாறு ஒன்றையொன்று உணர்த்திக் கொள்கின்றன? இந்த மிருகங்களுக்கு சிந்திக்கும் ஆற்றல் உண்டா? அவை ஒன்றோடொன்று பேசிக்கொள்ளுமா? 'மிருக பாஷை', 'பட்சிப்பாஷை' என்றெல்லாம் கதைகளில் கேள்விப்படுகின்றோம் அல்லவா? அப்பாஷைகள் உண்மையாகவே உண்டா? இவ்வகையான ஆராய்ச்சியை நிகழ்த்துதல் அவசியமே.

### மிருகங்களும் சொற்பொருளும்

சில மிருகங்கள் சைகையைத் தெரிந்துகொள்கின்றன. அடிக்கடி சொல்லும் சில வார்த்தைகளைக் கூட அவை புரிந்து கொள்கின்றன. உண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடலாம். ஹான்ஸ் என்று பெயரிட்டு ஒரு நாயை ஒரு ஜெர்மனியக் குடும்பத்தினர் வளர்த்து வந்தனர். அந்தக் குடும்பத் தலைவன் தனது நாய் ஜெர்மன் மொழியைத் தவிர வேற்று மொழியைப் புரிந்து கொள்வதில்லை


இலவச விநியோகத்திற்காக

என்று பெருமையோடு பலர்க்கும் காட்டிவந்தான். 'ஸ்ப்ராச்' என்ற ஜெர்மன் மொழிக்குப் 'பேசு' என்று பொருள். இதைச் சொன்னால் தான் அந்த நாய் மகிழ்ந்து குரைக்குமாம். அப்பொருளேயுள்ள 'ஸ்பீக்' என்ற ஆங்கில மொழியைச் சொன்னால் நாய் சும்மா இருந்து விடுமாம். இந்த நாய்க்கு ஜெர்மன் மொழி புரிந்ததா?

நாம் வளர்த்து வரும் நாயிடத்தில் இம்மாதிரிப் பரீட்சை செய்து பார்க்கலாம். பார்த்தால் நாய் தெரிந்து கொள்வது நமது தொனியையும் கைக்கரணம் முதலியவற்றையும்தான் என்பது நன்றாய் விளங்கும்.

பேச முடியாத காரணத்தினால் தான் மாடு முதலிய மிருகங்களை 'வாய்விடாப் பிராணி' என்று வழங்கி வருகிறோம். கிளி முதலிய பறவையினங்கள் பேசுகின்றனவே என்று சிலர் கேட்கலாம்.உண்மை. ஆனால் இவைகள் நாம் பேசுவதை அனுசரித்துத் திரும்பிச் சொல்கின்றன. சொல்லுவதன் பொருள், இவைகளுக்குத் தெரியமாட்டாது. கிளிக்குப் பால் வேண்டியிருக்கலாம்; பால், பால் என்று கத்தவும் செய்யலாம். ஆனால் தான் கத்தும் போது பால் கேட்பதாக அதுக்குத் தெரியவே தெரியாது. உளநூல் அறிஞர்கள் இம்முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

## மிருகங்களின் இயற்கைக் கூக்குரல்கள்

நாய் தனது எஜமானனது வீட்டினுள்ளே போக விரும்பித் தன் முன்னங்கால்களால் அடைத்திருக்கும் கதவைப் பறாண்டிக் குரைப்பதைச் சாதாரணமாய்க் காணலாம். இதைப் போலத்தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய மூதாதையர்கள் பேசுவதற்கு தட்டுண்டு தடுமாறி முயன்று வந்தார்கள். பசி வந்த போது பால் குப்பிக்காகக் குழந்தை அழுவதைப் பார்த்திருக்குறோம். இதைப் பேச்சு என்று சொல்லமாட்டோம். இது போன்றுதான் கதவைப் பறாண்டி நாய் குரைப்பதும். இப்படிக் குரைக்கும் போது பேச்சு உலகத்தின் - வாசலருகில் அந்நாய் வந்துவிட்டதென்று சிலர் கருதுவது தவறாகும். இவையெல்லாம் இயற்கையான கூக்குரல்கள் ஆகும். இவற்றிற்கும் மக்கள் பேச்சுக்கும் வெகு தூரம்.

மக்களின் பேச்சுச் சொற்கள் அவர்கள் கருத்தை வெளியிடுவதற்கு அமைந்த சங்கேதக் கருவியே. நாம் நாற்காலி என்று குறிக்கிற பொருளை ஆங்கிலேயன் 'செயர்' என்றும் பிரஞ்சுக்காரன் 'ஷெயிஸ்' என்றும், ஜெர்மானியன் 'ஸ்டூல்' என்றும் கூறுவான். இச்சொற்களுக்கும் பொருளுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. எல்லாச் சொற்களும் இப்படியே. சொற்கள் குறியீடுகளேன்றி வேறொன்றும் மல்ல. இக்குறியீடுகளை அமைப்பதற்கு மக்களின் அறிவு துணையாதல் வேண்டும்.

## பேச்சுச் செல்வம்

ஆகவே, பேச்சு என்பது மக்களது அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்த செல்வமாகும் என்று நாம் எளிதில் துணியலாம். அன்றியும் அது மக்களினத்துக்கு மட்டுமே ஏகவுரிமையாக உள்ளதென்பதும் நாம் நன்கு உணரலாம். விலை மதிக்கமுடியாத இப்பரம்பரை உரிமைதான் நம்மக்களினத்தவர்க்குச் சிருஷ்டிகளில் தலைமைப் பதவியை அளித்திருக்கிறது.

*பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை*
*"தமிழின் மறுமலர்ச்சி"*